**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 247/ந/2025, நாள் 24.12.2025

V. ரவிச்சந்திரன்,
மானாமதுரை,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மானாமதுரை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, பழைய இராமநாதபுரம் ரஸ்தா, கதவு எண்.7/52 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. ரவிச்சந்திரன் என்பவரின் 09.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.06.2025 அன்று பெறப்பட்டு, 247/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, பழைய இராமநாதபுரம் ரஸ்தா, கதவு எண்.7/52 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. ரவிச்சந்திரன் என்பவர் தனது 09.06.2025 நாளிட்ட மனுவுடன் பெறப்பட்ட ஆவணத்தில் 03.04.2025 நாளிட்டு நகராட்சி ஆணையர், மானாமதுரை நகராட்சிக்கு அனுப்பிய புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"கட்டிட வரைபட அனுமதி பெற சமர்ப்பிக்கப்பட்ட மானாமதுரை டவுன், பழைய இராமநாதபுரம் ரஸ்தா, புதிய வார்டு எண்.24 எல்லைக்கு உட்பட்ட சர்வே எண்.341/15 க்கு உட்பட்ட இடம் சுமார் 398 சதுரடி பரப்பு கொண்ட ஒரு கூம்பு வடிவமைப்பு கொண்ட இடமாகும்.

சுமார் 398 சதுரடி பரப்பு கொண்ட ஒரு கூம்பு வடிவ இடத்தின் ஆவணத்தை சமர்ப்பித்து சதுரவடிவில் 882 சதுரடி பரப்பு கொண்ட தரைதள வீடும், 882 சதுரடி பரப்பு கொண்ட முதல்தள வீடு கட்ட மானாமதுரை நகராட்சி கட்டிட வரைபட அனுமதி எண்.BL.No.88/2017-18 மற்றும் BL No.70/2018-19–ல் கட்டிட வரைபட அனுமதிகளை (Building Plan Approvals) பெற்றிருப்பதும், வழங்கியிருப்பதும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகளுக்கு எதிரானதாகத் தெரிகிறது.

முதல் தளம் 882 சதுரடி தரைதளம் 882 சதுரடி Vacant 497 சதுரடி என ஒதுக்கீடு செய்து கட்டிட வரைபட அனுமதி வழங்கியிருக்கிறார்கள். Vacant Area 497 சதுரடி கட்டிடத்தைச் சுற்றி இல்லை. மேலும், கூடுதல் பரப்பில் கட்டியிருப்பதும் நன்கு தெரிகிறது.

கட்டிட வரைபட அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வருவாய்த்துறை ஆவணத்தில் பரப்பே சுமார் 398 சதுரடி என இருக்கும் போது அவ்விடத்தில் தரைதளவீடுகட்ட 882 சதுரடி, முதல் தள வீடுகட்ட 882 சதுரடி, Vacant Area-வுக்கு 497 சதுரடி என எவ்விதத்தில் ஒதுக்கீடு செய்து கட்டிட வரைபட அனுமதி வழங்கினார்கள் என்பது விசித்திரமாகவே உள்ளது. உள் நோக்கத்துடன் கொடுக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியாகவே தெரிகிறது.

எனவே மானாமதுரை பேரூராட்சி/நகராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ள தரைதள கட்டிட வரைபட அனுமதி எண்.B.L. No.88/2017-18 நாள். 04.01.2018 மற்றும் முதல்தள கட்டிட வரைபட அனுமதி எண்.B.L.No.70/2018?19 நாள். 20.08.2018–ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கட்டிட வரைபட அனுமதிகள் மற்றும் கட்டிட வரைபட அனுமதி பெற சமர்ப்பிக்கப்பட்ட வருவாய்த்துறை ஆவணமான சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மானாமதுரை டவுன், பழைய இராமநாதபுரம் ரஸ்தா, பழைய வார்டு எண்.7, புதிய நகராட்சி வார்டு எண்.24 எல்லைக்குட்பட்ட சர்வே எண்.341/15–ல் கண்ட 0.0.37 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள 51 கதவிலக்க எண் கொண்ட சர்வே எண்ணுக்கு உட்பட்ட ஆவணம், புல எண்.341/15–க்குரிய புல வரைபட நகல் (FMB) அனைத்தையும் நன்கு பரிசீலித்து நேரடிக் கள ஆய்வு செய்து விதிமீறல் கட்டிடம் என்பதை ஊர்ஜிதம் செய்து எவ்வித சமரசத்துக்கும் இடமின்றி இரண்டு கட்டிடவரைபட அனுமதியையும் ரத்துச்செய்து உள்ளாட்சி அமைப்பு விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விளக்கத்தை மனுதாரருக்கு அளித்து உதவும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முப்பது நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க மறுக்கும் பட்சத்தில் அல்லது கால நீட்டிப்புச் செய்து அலைக்கழிவு செய்ய முற்படும் பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புக்கள் முறைமன்ற நடுவத்திற்கு மேல்முறையீடு செய்து விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படும் என்பதையும் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.07.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் மானாமதுரை நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) மானாமதுரை நகராட்சி ஆணையாளர் தனது கடிதம் ந.க.எண்.456/2025/எப்1, நாள் 11.08.2025–ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

" திரு. வெ. ரவிச்சந்திரன் என்பவர் மானாமதுரை நகராட்சிக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தொடர்ந்து மாண்பமை உள்ளாட்சிகள் முறை மன்ற நடுவத்தின் கடிதம் நாள் 16.07.2025–ல் தெரிவித்துள்ளபடி, கீழ்கண்ட விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்பமை முறை மன்ற நடுவத்திற்கு விண்ணப்பம் அளித்துள்ள திரு. வெ. ரவிச்சந்திரன் விண்ணப்பதாரர் தனது 25.07.2025 நாளிட்ட விண்ணப்பத்தில், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன்படி 31.01.2024ம் தேதிய விண்ணப்பம் மற்றும் 14.03.2024ம் தேதிய மேல்முறையீட்டு விண்ணப்பம் ஆகியவற்றின்கீழ் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிட உரிமையாளரின் பதிவு பெற்ற ஆவணம், கட்டிட அனுமதிக்குரிய கட்டணம் செலுத்தப்பட்ட விபரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட வரைபட நகல் ஆகியவற்றை இவ்வலுவலக கடித ந.க.எண்.163/2024/எப்1 நாள் 29.04.2024–ல் பெற்றுள்ளார்.

திரு. வெ. ரவிச்சந்திரன், என்பவரின் மனுவில் மானாமதுரை நகராட்சியானது, பேரூராட்சியாக இருந்த காலகட்டத்தில் சர்வே எண். 341/15இல் கட்டிட அனுமதி எண்.88/2017 நாள் 04.01.2018இல் குறைவான பரப்பளவுள்ள இடத்திற்கு, கூடுதலான பரப்பளவில் வரைபடம் தயார் செய்து அனுமதி பெறப்பட்டுள்ளதாக புகார் மனு வரப்பட்டது. திரு. R. கருணாநிதி என்பவர் இது தொடர்பாக தொடர்ந்து புகார் அளித்துள்ளார். அதற்கு முறையாக பதில் அறிக்கையானது கீழ்கண்ட விபரப்படி தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

மீண்டும் மேற்படி R.கருணாநிதி என்பவரால் சர்வே எண்.341/14இல் இடம் தொடர்பாக OS 60 of 2019 மற்றும் OS 127 of 2019 என்ற வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், மேலும் தனது இரண்டு மனுக்களுக்கும் சேர்த்து நடவடிக்கை எடுக்க குறிப்பிட்டு மனு வரப்பட்டது.

மேலும் திரு.R.கருணாநிதி என்பவரால் தனது மனுக்கள் மனுதாரரின் சுயநலம் சார்ந்த மனுக்கள் அல்ல எனவே காலதாமதம் இன்றி தக்க நடவடிக்கை எடுக்கக்கோரி மனு வரப்பட்டது.

அதனடிப்படையில், மேற்படி புகார் தொடர்பாக உரிய விளக்கம் தரக்கோரி, புகாருக்கு உட்பட்ட கட்டிட உரிமையாளர் திரு. ராஜேஸ்கண்ணன் என்பவருக்கு நகராட்சியினால் 13.02.2024 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு, அதன் நடவடிக்கை விபரத்தை, மனுதாரருக்கு நகராட்சி அலுவலக அறிவிப்பின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, திரு. ராஜேஸ்கண்ணன் என்பவரால் மேற்படி புகாரினை வீண்பழி என்று குறிப்பிட்டு உரிய ஆவணங்கள் இணைக்காமல் கடிதம் வரப்பட்டது.

மேலும், திரு.R.கருணாநிதி என்பவரின் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மனுவினை ஏற்று நகராட்சியின் கடிதத்தின் படி திரு. R. கருணாநிதி என்பவரை மேற்படி புகார் நடவடிக்கை வழங்கப்பட்ட, இதே இவ்வலுவலக கோப்பினை பார்வையிட அனுமதித்தும், மேற்படி கோப்புகளை பார்வையிட்டும், கோப்பு நகல்கள் வழங்கப்பட்டும் உள்ளது.

இதனை தொடர்ந்து புகாருக்கு உட்பட்ட கட்டிடத்தை ஒட்டிய பின்புறம், சர்வே எண்.341/13இல் கட்டிடம் அனுமதி பெறாமல், புகாருக்கு உட்பட்ட கட்டிட உரிமையாளரின் மனைவி பெயரில் புதிய கட்டிடத்தை கட்டி வருவதாக குறிப்பிட்டு திரு. R. கருணாநிதி என்பவரிடமிருந்து 13.04.2024 நாளிட்ட புகார் மனுவானது வரப்பட்டது.

மேற்படி, மனுவின் தகவல்களின் அடிப்படையில் புகாருக்கு உட்பட்ட கட்டிட உரிமையாளரிடமிருந்து உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி நகராட்சி அலுவலக அறிவிப்பு Form I வழங்கப்பட்டது. அதன்படி, திரு. ராஜேஸ்கண்ணன் என்பவரின் தரப்பில் மேற்படி புகார்கள் பொய்புகார் என குறிப்பிட்டு, மேற்படி புகாருக்கு உட்பட்ட கட்டிடம் தொடர்பான ஆவணங்களுடன் திரு.R.ராஜேஸ்கண்ணன் என்பவரின் 08.05.2024 நாளிட்ட கடிதம் வரப்பட்டது.

மேற்படி, விளக்க கடிதத்துடன் இணைத்து வரப்பட்ட கட்டிட வரைபட அனுமதி வரைபடம் கட்டிட வரைபட அனுமதி எண்.70/2018–2019 நாள் 20.08.2018 மற்றும் கிரைய ஆவணங்களின் அடிப்படையில் தலஆய்வு மேற்கொள்ளுவதற்கு தேதி குறிப்பிட்டு நகராட்சி அலுவலக அறிவிப்பு Form II Notice No.01/2024, நாள் 16.05.2024ல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சர்வே எண். 341/13 இல் கட்டிட அனுமதி பெறாமல் மேற்படி புகாருக்குட்பட்ட கட்டிடத்தினை ஒட்டியே வேறு ஒரு நபர் கட்டிடம் கட்டி வருவதாக திரு.R.கருணாநிதி என்பவரின்

13.04.2024 நாளிட்ட மனுவிற்கு முரணாக அவரே தனது 28.05.2024 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.

திரு.R.ராஜேஸ்கண்ணன் என்பவரின் 08.05.2024 நாளிட்ட விளக்க கடிதத்துடன் இணைத்து வரப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தல ஆய்வு செய்யப்பட்டதில், திரு.R.கருணாநிதி என்பவரின் புகார் உறுதி செய்யப்பட்டு விதி மீறல் குறிப்பிடப்பட்டு நகராட்சி அலுவலக அறிவிப்பு Form IV Notice No.01/2024 நாள் 06.06.2024–ல் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, அறிவிப்பு வழங்கப்பட்ட விபரங்களை புகார் மனுதாரரான திரு. R. கருணாநிதி என்பவருக்கு இவ்வலுவலக 06.06.2024 நாளிட்ட அறிவிப்பின்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து புகார் மனுதாரர் திரு. R. கருணாநிதி என்பவரால் முன்னதாக இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்ற கடிதத்தில் சர்வே எண்.341/15இல் கட்டப்பட்டுள்ள கட்டிட உரிமையாளரும், சர்வே எண்.341/13 இல் கட்டப்பட்டுவரும் கட்டிட உரிமையாளரும் வெவ்வேறு பெயர்கள் கொண்ட வெவ்வேறு நபர்கள் ஆவார்கள் என குறிப்பிட்டு தனித்தனியே நடவடிக்கை எடுக்கக்கோரி திரு.R.கருணாநிதி என்பவரின் 12.06.2024 நாளிட்ட புகார் மனுவானது வரப்பட்டது.

இதே மனுதாரர் சர்வே எண்.341/15இல் புகாருக்குட்பட்ட கட்டிட உரிமையாளரின் மனைவி பெயரில் சர்வே எண்.341/13–ல் புதிய கட்டிடம் கட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். தற்போது தனது புகார் மனுக்களில் முன்னுக்கு பின் முரணாக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டதன் அடிப்படையில் தல ஆய்வு செய்து சர்வே எண்.341/15க்கு பின்புறம் அனுமதியின்றி கட்டி வரும் கட்டிடத்தினை இணைத்திருப்பது உறுதி செய்யப்பட்டு நகராட்சியின் மூலம் அறிவிப்பு Form IV வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் திருமதி. மாலதி க/பெ. ராஜேஸ்கண்ணன் என்பவர் இணையதளத்தின் வாயிலாக, மேற்படி 341/13இல் கட்டி வரும் கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி கோரி அதற்கான அபராத தொகையுடன் கட்டணம் செலுத்த தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டு திருமதி.R.மாலதி என்பவரின் கடிதம் நாள் 25.07.2024 வரப்பட்டது.

அதனை தொடர்ந்து 341/13இல் திருமதி. மாலதி என்பவருக்கு ஆவணங்களை பரிசீலித்து உரிய அபராதத்துடன் விதிகளுக்குட்பட்டு கட்டிட அனுமதியானது வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி புகாருக்குட்பட்ட சர்வே எண். 341/15ல் கட்டிட உரிமையாளரும், சர்வே எண். 341/13 இன் உள்ள கட்டிட உரிமையாளர் திருமதி மாலதி என்பவரும் கணவன் மனைவி என்பதாலும், கணவரின் பெற்றோரை பராமரிப்பதற்காக சர்வே எண். 341/15இல் கணவர் பெயரில் உள்ள கட்டிடத்துடன் இணைத்து கட்டிடம் கட்டியுள்ளதாக விளக்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி, சர்வே எண். 341/13இல் கட்டப்பட்டு வந்த கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்ககோரி திரு. R. கருணாநிதி என்பவரிடமிருந்து புகார் கடிதம் 30.07.2024 நாளிட்டு வரப்பட்டது.

மேற்படி சர்வே எண். 341/13இல் கட்டப்பட்டு வந்த கட்டிடத்திற்கு உரிய அபராதத்துடன் விதிகளுக்குட்பட்டு, திருமதி மாலதி என்பவருக்கு கட்டிட அனுமதியானது வழங்கப்பட்டுள்ளதால், புகார் மனுதாரரின் புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை தொடர ஏதுமில்லை.

மேற்படி புகார் மனுதாரார் திரு. R. கருணாநிதி என்பவர் குறிப்பிட்டுள்ள புகாருக்குட்பட்ட கட்டிடமானது,

| | | |
|---|---|---|
| தரைத்தளம் | 88/2017–2018 | 81.97 சதுர மீட்டர் |
| முதல்தளம் | 70/2018–2019 | 81.97 சதுர மீட்டர் |

பேரூராட்சியாக இருந்த காலகட்டத்தில் அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். மேற்படி கட்டிடத்தின் தரைதளம் மற்றும் முதல்தளம் பேரூராட்சி காலகட்டத்திலேயே வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. புகார் மனுவில் தெரிவித்துள்ளபடியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரைகளின்படியும், பேரூராட்சி காலக்கட்டத்தில் விடுதலான அனைத்து கட்டிடங்களும் கண்டறியப்பட்டு, தற்போது வரிவிதிப்பு மற்றும் வரி சீராய்வு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, முதல்தளத்திற்கு வரி சீராய்வு செய்யப்பட்டு, வரி சரியாகவே உள்ளது. இந்நிலையில், புகார் மனுதாரர் திரு. வெ. ரவிச்சந்திரன் மற்றும் திரு. R. கருணாநிதி ஆகியோர்கள் 3, 4 மற்றும் பார்வையில் கண்டுள்ள தொடர் புகார் மனுக்களின் அடிப்படையில் தல ஆய்வு செய்து சர்வே எண்.341/15 மற்றும் 341/13 ஆகிய சர்வே எண்களில் உள்ள கட்டிடத்தை இணைத்து நகராட்சி அலுவலக அறிவிப்பு Form IV மூலம் பின்வரும் விபரப்படி வழங்கப்பட்டுள்ளது.

| விபரம் | அனுமதியின் படி | தற்கால அளவுபடி |
|---|---|---|
| தரைத்தளம் | 81.97 சதுர மீட்டர் | 134 சதுர மீட்டர் |
| முதல்தளம் | 81.97 சதுர மீட்டர் | 82.3 சதுர மீட்டர் |

மேற்சொன்ன தற்கால தரைத்தள அளவில் சர்வே எண்.341/13இல் திருமதி. மாலதி என்பவரின் 25.07.2024 மற்றும் 26.07.2024 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளதன்படி, உரிய அபராதத்துடன் சர்வே எண்.341/13இல் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட பரப்பளவை தவிர்த்து புகாருக்கு உட்பட்ட கட்டிடமானது முந்தைய பேரூராட்சியின் அனுமதிக்கப்பட்ட பரப்பளவை ஈடுசெய்கிறது. புகார் மனுதாரர் திரு. R. கருணாநிதி என்பவரின் மனுவில் குறிப்பிட்டுள்ளபடி, வரி சீராய்வு மற்றும் அனுமதியற்ற கட்டிடத்திற்கான அபராதம் ஆகியவை விதிக்கப்பட்டு, மனுதாரரின் மனு மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் திரு. வெ. ரவிச்சந்திரன் என்பவர் அனுமதி மற்றும் புகார் மனுவில் குறிப்பிட்ட கட்டிட ஆவணங்களை தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் 29.07.2024–ல் பெற்றுள்ளார். தற்போது மீண்டும் 03.07.2025–ல் கட்டிட அனுமதி தொடர்பாக புகார் மனு அளித்துள்ளார் என்பதை மாண்பமை முறை மன்ற நடுவரின் மேலான பார்வைக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மானாமதுரை நகராட்சி ஆணையாளர் இருவரையும் 25.09.2025 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 18.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. V. ரவிச்சந்திரன் மற்றும் திரு.R.கருணாநிதி ஆகியோர் 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

“சர்வே எண்.341/15க்கு உட்பட்ட சுமார் 398 சதுரடி, பரப்பளவு கொண்ட இடத்தின் ஆவணத்தை சமர்ப்பித்து சதுர வடிவில் 882 சதுரடி பரப்பளவில் தரைதள வீடும், 882 சதுரடி முதல் தளம் வீடும் கட்ட கட்டிட வரைபட அனுமதிகளை (Building Plan Approvals) பெற்று கூடுதல் பரப்பளவில் வீடு கட்டப்பட்டுள்ளது.

சுமார் 398 சதுரடி உள்ள இடத்தில் தரைதளம் 882 சதுரடி, முதல் தளம் 882 சதுரடி என வீடு கட்டவும் Vacant Area 397 சதுரடி என ஒதுக்கீடு செய்து கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திரு. ஆர். கருணாநிதி என்பவர் மானாமதுரை நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் வரைபட அனுமதிக்கு மீறி அதிகமாக கட்டிடம் கட்டப்பட்டது தொடர்பாக தகவல் கோரியுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் வரைபட அனுமதி கோரியும் தகவல் அளிக்கப்படவில்லை. 398 சதுர அடி மனையில் உள்ள கட்டிடத்திற்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 484 சதுர அடி மனையில் கட்டப்படும் கட்டிடத்திற்கு அனுமதி பெறப்படவில்லை.

ஆவணங்கள் பரிசீலித்து வரைபட அனுமதியை ரத்து செய்யுமாறும், விதிமீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்”. என தெரிவித்துள்ளனர்.

6) எதிர்மனுதாரராகிய மானாமதுரை நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சியில் மேலாளராகப் பணிபுரியும் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“மனுதாரரால் புகாராக தெரிவித்துள்ள கட்டிடத்திற்கு சர்வே எண்.341/15ல் 398 சதுர அடியும், 341/13ல் 484 சதுர அடியும் மொத்தம் 882 சதுர அடிக்கு மானாமதுரை நகராட்சியால் 2018–ம் ஆண்டு திரு. ராஜேஸ்கண்ணன் மற்றும் திருமதி. மாலதி என்பவர்கள் பெயரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திரு. ஆர். கருணாநிதி என்பவர் மானாமதுரை நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் வரைபட அனுமதிக்கு மீறி அதிகமாக கட்டிடம் கட்டப்பட்டது தொடர்பாக தகவல் கோரி அது மூன்றாம் நபர் தகவல் என்பதால் தகவல் ஆணையம் மூலம் மேற்கண்ட தகவலினை திரு. கருணாநிதி என்பவருக்கு தகவல் அளிக்க அவசியமில்லை என்று ஆணையிடப்பட்ட நிலையில், அதே தகவலை திரு. ரவிச்சந்திரன் என்பவர் மீண்டும் மீண்டும் கோரி வருகிறார்.

திரு. ராஜேஸ்கண்ணன் மற்றும் திருமதி. மாலதி ஆகியோர் மேற்படி இடம் தொடர்பாக மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.127/2019 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்’’. என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம் மானாமதுரை நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான மேலாளரின் வாக்குமூலம் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கப்படுகிறது.

சர்வே எண்.341/15க்கு உட்பட்ட சுமார் 398 சதுரடி, பரப்பளவு கொண்ட இடத்தின் ஆவணத்தை சமர்ப்பித்து சதுர வடிவில் 882 சதுரடி பரப்பளவில் தரைதள வீடும், 882 சதுரடி முதல் தளம் வீடும் கட்ட கட்டிட வரைபட அனுமதிகளை (Building Plan approvals) பெற்று கூடுதல் பரப்பளவில் வீடு கட்டப்பட்டுள்ளது என்றும், சுமார் 398 சதுரடி உள்ள இடத்தில் முதல் தளம் 882 சதுரடி என வீடு கட்டவும், vacant area 397 சதுடி என ஒதுக்கீடு செய்து கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும், இது தொடர்பாக திரு.ஆர்.கருணாநிதி என்பவர் மானாமதுரை நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் வரைபட அனுமதிக்கு மீறி அதிகமாக கட்டிடம் கட்டப்பட்டது தொடர்பாக தகவல் கோரியுள்ளதற்கு தகவல் அளிக்கப்படவில்லை எனவும், 398 சதுர அடி மனையில் உள்ள கட்டிடத்திற்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும் மீதமுள்ள 484 சதுர அடி மனையில் கட்டப்படும் கட்டிடத்திற்கு அனுமதி பெறப்படவில்லை எனவும் ஆவணங்களை பரிசீலித்து வரைபட அனுமதியை ரத்து செய்யுமாறும், விதிமீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார்.

மனுதாரரால் புகாராக தெரிவித்துள்ள கட்டிடத்திற்கு சர்வே எண்.341/15–ல் 398 சதுர அடியும், 341/13–ல் 484 சதுர அடியும் மொத்தம் 882 சதுர அடிக்கு மானாமதுரை நகராட்சியால் 2018ம் ஆண்டு திரு.ராஜேஸ்கண்ணன் மற்றும் திருமதி.மாலதி என்பவர்கள் பெயரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதும், இது தொடர்பாக திரு.ஆர்.கருணாநிதி என்பவர் மானாமதுரை நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் வரைபட அனுமதிக்கு மீறி அதிகமாக கட்டிடம் கட்டப்பட்டது தொடர்பாக தகவல் கோரி அது மூன்றாம் நபர் தகவல் என்பதால் தகவல் ஆணையம் மூலம் மேற்கண்ட தகவலினை திரு.ஆர்.கருணாநிதி என்பவருக்கு தகவல் அளிக்க வேண்டிய அவசியமில்லை என ஆணையிடப்பட்ட நிலையில் அதே தகவலை திரு.ரவிச்சந்திரன் என்பவர் மீண்டும், மீண்டும் கோரி வருகிறார் என்பதும், திரு.ராஜேஸ்கண்ணன் மற்றும் திருமதி.மாலதி ஆகியோர் மேற்படி இடம் தொடர்பாக மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.O.S.127/2019 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும் மானாமதுரை நகராட்சியின் சார்பில் ஆஜரான நகராட்சி மேலாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இச்சூழ்நிலையில், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)-ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரரின் புகார் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி, மனுதாரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 24–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. V. ரவிச்சந்திரன்,
   த/பெ. வெள்ளைச்சாமி,
   கதவு எண்.7/52, பழைய இராமநாதபுரம் ரஸ்தா,
   மானாமதுரை – 630 606
   சிவகங்கை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   மானாமதுரை நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்